www.agaram.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

## கிறிஸ்தவ சமயம் - ක්‍රිස්තු ධර්මය

தரம் : 6 நேரம்: 2 மணித்தியாலம்

பெயர் /சுட்டெண்:

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

1. இயேசு கிறிஸ்துவின் பிறப்பை முதலில் தேவதூதன் அறிவித்தது,
   1) விவசாயிக்கு 2) மேய்ப்பாளர்களுக்கு
   3) சாஸ்திரிகளுக்கு 4) சாதாரண மக்களுக்கு

2. திருமுழுக்கு யோவானின் பெற்றோர்கள் ஆவன
   1) மரியாள், யோசேப்பு 2) அன்னா, எல்கானா
   3) ஆபிரகாம், சாராள் 4) எலிசபெத், செக்கரியா

3. இயேசு தனது பெற்றோருடன் ஜெருசலம் தேவாலயம் சென்றது எப் பண்டிகையை கொண்டாடுவதற்கு.
   1) பாஸ்கா பண்டிகை 2) கூடாரபண்டிகை
   3) நத்தார் பண்டிகை 4) நூற்றாண்டு விழா

4. யூதர்கள் பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்ட போது சமாரியாவுக்கு வந்து குடியேறிய மக்கள் கூட்டம் அறிமுகப்படுத்தப்படுவது.
   1) யூதர்களாக 2) பாபிலோனியர்களாக
   3) சமாரியர்களாக 4) வேதபாரகர்களாக

5. மரம் ஒன்றை நடுவதற்கு ஊடாக இறைபடைப்பில் உமது பங்களிப்பாவது
   1) மழையை பெற்றுக் கொடுப்பதற்காக
   2) மனிதனான தனது கடமையை நிறைவேற்றுவதற்காக
   3) படைப்பை மேலும் விருத்தி செய்வதற்காக
   4) சூழலை அழகுபடுத்துவதற்காக

- **இலக்கம் 6 இருந்து 10 வரை தரப்பட்டுள் வாக்கியங்கள் சரியாயின் (√) என்றும் பிழையாயின் (X) என்று இடுக.**

6. இயேசு தனது பன்னிரெண்டாவது வயதில் மடரியாள் யோசேப்புடன் எருசலேம் தேவமாளிகைக்கு சென்றார் ( )
7. இயேசுவின் சிலுவையை சுமந்து செல்வதற்கு சிரேன் ஊரை சேர்ந்த சீமோன் உதவி செய்தார். ( )
8. மனமாற்றத்திற்கான திருமுழுக்கினை இயேசுயோர்தான் நதிக்கரையில் பெற்றுக் கொடுத்தார் ( )
9. எமது வாழ்வை சரிசெய்து பாவத்தில் இருந்து விடுபட்டு வாழ்வது கிறிஸ்தவர்களான எமது கடமையாகும் ( )
10. எமது வாழ்வின் துன்பங்கள் ஏற்படுமிடத்து நம்பிக்கையை விட அடையாளம் மற்றும் அற்புதற்களை நம்பவேண்டும் ( )

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



- **இலக்கம் 11 இலிருந்து 15 வரையான வினாக்களுக்கு யு பகுதியில் கூறப்பட்ட வாக்கியத்திற்கு பொருத்தமான விடையை தெறிவு செய்து இணைக்க**

| A | B |
|---|---|
| 11. தாவீதின் மகனான இயேசுவே எனக்கு இரங்கும் | • எத்தியோப்பிய நதி அமைச்சு |
| 12. எனக்கு அயலான் யார்? | • தேவதூதன் |
| 13. யாராயினும் விளக்கி கூறினால் அன்றி எனக்கு எப்படி விளங்கும் | • வேதபாரகன் |
| 14. மனிதன் அப்பத்தினால் மாத்திரம் வாழ்வதில்லை | • பார்த்திமேயு |
| 15. அவர் இங்கு இல்லை அவர் சொன்னபடி உயிர்த்தெழுந்தார் | • இயேசுகிறிஸ்து |

- **இலக்கம் 16 இலிருந்து 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக் குறியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

ஏதேன்/கிளயோப்பா/ஸ்தேவான்/பிலிப்பு/தொடக்கநூல்

16. அன்னியனான எத்தியோப்பிய நிதியமைச்சருக்கு இறை செய்தியை பெற்றுக் கொடுத்தது ....................................... ஆவார்.

17. இறைவன் ......................................... தோட்டத்தை படைத்து ஆதாம், ஏவாக்கு ஒப்புக்கொடுத்தார்.

18. படைப்பு பற்றி வேதாகமத்தில் கூறப்படுவது .................................... புத்தகத்திலாகும்.

19. எம்மாவூர் பயணத்திற்கு தொடர்பான சீடனான ............................................ காணப்படுகிறார்

20. திருத்தொண்டர்களின் தலைவன் ....................................... ஆவன்.

(20x2=40 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**பகுதி II**

- **முதலாம் வினா கட்டாயமானதாகும். முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. 1) இறைபடைப்பின் மேன்மையான படைப்பு யாது?
   2) யூதர்களின் நியாயப்பிரமானத்திற்கு அமைய ஆண்பிள்ளை எத்தனை வயதில் வளர்ந்தோராக கணிக்கப்படுவர்.
   3) குழந்தை யேசுவை நண்டு கொள்வதற்கு மேய்பாபர்களுக்கு கொடுக்கப்பட்ட அடையாளம் யாது?
   4) இயேசுவின் சிலுவையில் குறிப்பிடப்பட்டிருந்த வார்த்தை யாது?
   5) இயேசு உயிர்த்த நாள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது.
   6) சீடர்கள் தூய ஆவியை பெற்றுக் கொண்ட நாள் எவ்வாறு அழைக்கப்படும்?
   7) யூதர்களின் பாஸ்கா விழா என்றால் என்ன?
   8) "நான் என் தந்தையின் வீட்டில் இருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா" யாரால் யாருக்கு கூறப்பட்டது.

2. 1) இயேசுவின் பெற்றொரின் பெயர்களை குறிப்பிடுக.
   2) குழந்தை இயேசுவை பார்க்க வந்த சாஸ்திரிகள் கொண்டு வந்த பொருட்கள் 3 தருக.
   3) கிறிஸ்து பிறப்பை கொண்டாடும் பொழுது நாம் செய்ய வேண்டிய நன்மையான செயல்கள் 3 தருக.

3. 1) இயேசுவிற்கு ஏற்பட்ட சோதனைகள் எத்தனை?
   2) இயேசுவிற்கு ஏற்பட்ட சோதனைகளை முறையாக குறிப்பிடுக.
   3) கிறிஸ்தவ பிள்ளையான உமது வாழ்வில் ஏற்படும் சோதனைகள் 6 தருக.

4. 1) இயேசுவின் உயிர்தெழுதலின் சாட்சியான பெண்கள் 2 குறிப்பிடுக.
   2) கல்லறைக்கு சென்ற பெண்களுக்கு இயேசுவைப் பற்றி கிடைத்த செய்தி யாது?
   3) நற்செய்தியை மற்வர்களிடம் கொண்டு செல்வத்கு நீர் செய்யக்கூடிய செயல்கள் 3 தருக.

5. 1) இயேசு தனது பணியை எத்தனை வயதில் ஆரம்பித்தார்?
   2) திருமுழுக்கு யோவானின் பணி யாது?
   3) திருமுழுக்கு பெற்ற கிறிஸ்தவ பிள்ளையான நீர் உமது பாடசாலையில் எவ்வாறு செயற்படுவீர் 3 விடயங்கள் குறிப்பிடுக.

6. 1)இயேசு தனது வாழ்க்கையை அர்ப்பணித்தது ஏன்?
   2)நித்திய வாழ்வை பெற்றுக் கொள்வதற்கு உம்மில் இருக்க வேணடிய நற்பண்புகள் 3 தருக.
   3)உமது பாவத்திற்கு மன்னிப்பு வேண்டிய சிறு செபம் ஒன்றை எழுதுக.

7. 1) படைப்பின் உரிமையாளர் யார்?
   2) இறைவனின் படைப்புக்களில் ஒன்றான மரங்களினால் கிடைக்கும் பயன்கள் 3 தருக.
   3) சூழலை பாதுகாக்க நீர் மேற்கொள்ள கூடிய விடயங்கள் 3 தருக.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk